**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 124** **நாள் : 07.06.2025**

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இராயபுரம் மற்றும் திரு.வி.க.நகர் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், குறளகத்துடன் இணைத்து பிராட்வே பேருந்து நிலையத்தில் பல்வேறு போக்குவரத்து இணைப்புகளை ஒருங்கிணைத்து ரூ.822.70 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம், ஒருங்கிணைந்த போக்குவரத்து வசதிகளுடன் புதிதாக கட்டப்படவுள்ள பல்நோக்கு ஒருங்கிணைந்த பேருந்து வளாகம் (Multi Model Facility) அமைப்பதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை இன்று (07.06.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவில் தொடங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, பிராட்வே பேருந்து நிலையத்தில் பல்நோக்கு ஒருங்கிணைந்த பேருந்து வளாகம் (Multi Model Facility) அமைப்பதை முன்னிட்டு, இராயபுரம் மண்டலம், வார்டு-60க்குட்பட்ட என்.ஆர்.டி. மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டு வரும் பேருந்து நிலையக் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-69ல் ரூ.13.47 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் சமூகநலக் கூட கட்டுமானப் பணி, மார்க்கெட் தெரு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் வார்டு-70க்குட்பட்ட மடுமா நகர் சென்னை நடுநிலைப்பள்ளியில் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடப் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்துப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர்கள் திரு.பி.ஸ்ரீராமுலு, திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு** : **இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**